**நிந்தவூர் பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிந்தவூர் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) சபையின் மோட்டார் கிரேடர் மற்றும் இயந்திரத்தின் மூலம் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய வாடகை ரூபா 182,720 நிலுவைத்தொகை நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகை நிதிக்கூற்றிற்கு காட்டப்படல் வேண்டும். | 2015ம் ஆண்டிற்கு முன்னரே இவ்வாறான மீதிகள் காணப்பட்டிருந்தும் தற்பொழுது எம்மால் இதில் காணப்பட்ட நிலுவைகள் ரூபா 89,740.00 அறவீடு செய்யப்பட்டுள்ளது. மீதித் தொகைகளை அறவீடு செய்வதற்கு எம்மால் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ii) சபையின் பழைய அலுவலகக் கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரை நிலுவையாக உள்ள வாடகை ரூபா 540,000 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | நிலுவைத் தொகை நிதிக்கூற்றிற்கு காட்டப்படல் வேண்டும. | சபையின் பழைய அலுவலக கட்டிடமானது 2015 செப்டம்பர் 22 ஆம் திகதி முதல் 2018 செப்டம்பர் 12 ஆம் திகதிவரை சுகாதார இராஜாங்க அமைச்சின் பிராந்திய அலுவலகத்திற்காக மாத வாடகைக்கு விட்டவகையில் நிலுவையான வாடகை வருமானத்தினை அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கையானது எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான 04 வருமான விடயங்களில் வருமானச் செலவுக் கணக்கு மற்றும் வருமான அறவீடு நிலுவைகள் கூற்றிற்குமிடையே ரூபா657,261 தொகை வேறுபட்டிருந்தன. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளை சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதியாண்டிற்காக தயாரிக்கப்பட்ட இறுதிக்கணக்கறிக்கையில் PS-17, PS-19 என்பனவற்றில் சரியாக பதியப்பட்ட தொகைகளில் சில தொகைகள் PS-07 இல் தவறுதலாக பதியப்பட்டுள்ளமையினைக் காணக்கூடியதாகவுள்ளது. |

**(இ) ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின்படி ரூபா42,842,560 பெறுமதியான 05 நிலையான சொத்து விடயங்களுக்குரிய காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, வாகன உரிமைப் புத்தகங்கள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த/ மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக் களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | எமது சபையில் சொத்துப்பதிவேடு காணப்பட்ட பொழுதும் காணிகட்டிடங்களும், பொறித்தொகுதியும் போன்றவற்றுக்கான பதிவுகள் முறையாக பதிவு செய்யப்படாமல் காணப்படுகின்றது. தற்போது அவை எங்களால் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**1.4. இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிஒழுங்குவிதி 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,442,553 பெறுமதியான 26 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. | குறித்த விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக எம்மால் தொடர் நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டு தற்போது இவைகள் சீர்செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 27,100,729 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 4,043,938 தொகையாக ஆக இருந்தது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 9,848,000 | 5,385,700 | 5,815,785 | 4,387,593 | 8,848,000 | 4,464,300 | 2,984,750 | 4,817,677 |
| வாடகைகள் | 6,232,000 | 5,816,471 | 5,880,371 | 3,186,666 | 8,415,000 | 5,134,940 | 5,159,570 | 3,250,566 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 985,000 | 1,100,780 | 1,100,780 | -- | 1,025,000 | 827,150 | 827,150 | -- |
| ஏனைய வருமானம் | 17,490,000 | 31,564,097 | 14,569,056 | 20,339,832 | 13,025,000 | 12,784,869 | 12,618,037 | 3,344,790 |
| | 34,555,000 | 43,867,048 | 27,365,992 | 27,914,091 | 31,313,000 | 23,211,259 | 21,589,507 | 11,413,033 |

### 2.2.2 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1980 முதல் 2012 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகை ரூபா 3,173,466 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீண்ட காலமாக அறவிட முடியாது காணப்படுகின்ற இறைச்சிக்கடை நிலுவைகளை உரிய முறைப்படி பதிவழிப்பு செய்வதற்கான நடவடிக்கையாக எமது பிரதேச சபைக்கான 04 ஆவது சபையின் 28 ஆவது கூட்டத்தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதும் இது தொடர்பான ஆவணங்கள் தங்கள் பார்வைக்காக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையும் எம்மால் மேற்கொள்ளப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 14 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முக்கிய விடயங்களுக்கான உப விதிகளை தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். | எமது சபையினால் சில விடயங்களுக்கான உப விதிகளை தயாரித்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்தோடு, தங்களால் சுட்டிக்காட்டப்பட்டது போன்று ஏனைய விடயங்களுக்கான உப விதிகளையும் தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட 06 உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும். | எமது பிரதேச சபையின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமானது பொதுமக்களின பூரணபங்குபற்றுதலுடன் அவர்களின் விருப்ப தெரிவு முன்னுரிமை அடிப்படையில் 2019 – 2022 ஆண்டு காலப்பகுதிக்கான திட்டமிடல் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் கீழ் குப்பைகளை பிரித்து எடுப்பதற்காக 5,000 குடும்பங்களுக்கென 10,000 | திண்மக் கழிவுகளை தரம்பிரித்து எடுப்பதுடன் | மீதமாக உள்ள 2363 பைகள் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கப்படுகின்றது. மேலும் |

| | | |
|---|---|---|
| கழிவகற்றல் பைகள் ரூபா 385,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருப்பினும் 2,363 கழிவகற்றல் பைகள் வழங்கப்படாமல் உள்ளதுடன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட 720 டொன் குப்பைகள் பிரிக்கப்படாமலும் மீள்சுழற்சிக்கு பயன்படுத்தப்படாமலும் குவிக்கப்பட்டுள்ளது. | அதனை மீள்சுழற்சிக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதனை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திண்மக்கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்கான எவ்விதமான வசதிகளும் எமது சபையிடம் இன்மையால் இத்திண்மக்கழிவுகள் யாவும் அட்டாளைச்சேனை ஆலிம் நகரிலுள்ள திண்மக்கழிவு சேகரிக்கும் இடத்திற்கு வழங்கப்படுகின்றது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆண்டிற்கான நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் 17 இலக்குகளுக்கு இணங்க எமது சபையினால் சில செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவை சரியான, தெளிவான வடிவில் தொகுக்கப்படாமல் இருந்தது. எனவே எதிர்வரும் காலங்களில் இந்நிகழ்ச்சி நிரலின் இலக்குகளுக்கு அமைவாக செயற்திட்டங்கள் தொகுக்கப்பட்டு அவற்றினை அடைவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தெரு விளக்கு மின்பாவனை தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய மின்சார பாவனைக் கட்டணம் ரூபா 2,951,150 மற்றும் இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வருமதிகள் ரூபா 2,477,322 என்பவற்றை செலுத்துவதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது 22 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | குறித்த நிலுவைத் தொகையினை பதிவழிப்பு செய்வதற்கான நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும். | நிலுவைத் தொகைகளை உரிய முறைப்படி பதிவழிப்பு செய்வதற்கான நடவடிக்கையாக எமது பிரதேச சபைக்கான 04 ஆவது சபையின் 28 ஆவது கூட்டத்தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதும் நடவடிக்கையும் எம்மால் மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபையில் பயன்படுத்தப்படும் 05 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் பெயருக்கு உரிமை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதனை மாற்றம் செய்வதற்கு எம்மாலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கமைய மீயாய்வாண்டின் இறுதிவரை 10 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | வேற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆளணிகள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் எம்மால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 180 நாட்களை பூர்த்தி செய்து தற்போது எமது அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற ஊழியர்களை இவ் வெற்றிடமான இடங்களில் நிரப்புவதற்கான நடவடிக்கைகளும் எம்மால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |
| (ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலையை விட்டு நீங்கிய 24 ஊழியர்களுகளின் கடன் நிலுவை ரூபா 104,957 தொகையானது 2013 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாது காணப்படுகின்றது. | கடன்களின் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன்களின் நிலுவைத் தொகைகளை உரிய ஊழியர்களிடமும் மற்றும் அவர்களது பிணைகாரர்களிடமும் அறவிடுவதற்கான நடவடிக்கையானது எம்மல் தற்போது எடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 186,982,607 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை. | அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். | பதிவேடுகளை பராமரிப்பதற்கான ஏற்பாடுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு தற்போது விடய உத்தியோகத்தரால் செய்யப்பட்டு கொண்டிருப்பதுடன், பதிவேடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டவுடன் தங்கள் பார்வைக்காக சமர்ப்பிக்கப்படும். |

**3.4.2 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கு மேலாக நிந்தவூர் பொதுச் சந்தைக்கடைகள் 13 பாவனையின்றி உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | கடைகளினை வருமானம் உழைப்பதற்காக பயன்படுத்தல் வேண்டும். | பொதுச் சந்தைக்கடைகளை குத்தகைக்கு வழங்கல் நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

**3.5 பெறுகை**

**ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான PIDPs செயற்திட்டத்தின் கீழ் 10 பாதைகள் மற்றும் மையவாடிகள் என்பவற்றிற்கு மொத்தமாக ரூபா 8,329,900 செலவில் 400 LED மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) மொத்தமாக 60,000W வாட்ஸ் உடைய 400 LED மின்விளக்குகள் சபையின் எல்லைக்குள் இடுவது தொடர்பில் இலங்கை மின்சார சபையிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மின்சார சபையிடமிருந்து எழுத்துமூலமான அனுமதி பெறப்படல் வேண்டும். | மேற்படி மின்விளக்குகள் சபையின் எல்லைக்குள் இடுவது தொடர்பில் இலங்கை மின்சார சபையிடம் கௌரவ தவிசாளர் கலந்தாலோசனை செய்திருந்தும் இது ஆவண வடிவில் பெற்றிருக்கவில்லை. |
| (ii) அரசாங்கப் பெறுகைக் கைந்நூல் (Supplementary 34) 2.14.1 இன்படி இவ் வேலைகளானது ஆகக்குறைந்தது பொறியிடப்பட்ட 5 கூறுவிலைகள் பெற்று ஒப்பந்தம் மேற்கொள்ளவேண்டியிருந்தும் இதற்கு முரணாக இக்குறித்த வேலையானது பத்து வேலைகளாக பிரிக்கப்பட்டு 10 சனசமூக நிலையங்களிற்கு நேரடியாக வழங்கப்பட்டிருந்தது. | அரசாங்கப் பெறுகைக் கைந்நூலிற் கமைய கூறுவிலைகள் கோரப்பட்டு பொருத்தமா விலை மற்றும் தரத்தில் பெறுவனவு மேற்கொள்வதினை உறுதிப்படுத்தல் வேண்டும். | மேற்படி வேலைகள் வர்த்தக வாணிப அமைச்சினால் 10 வேலைகளாக பிரிக்கப்பட்டு அதற்கான ஒதுக்கீடுகளும் ஒதுக்கப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மின்சாரப் பொருட்களுக்கான விலைகள் சந்தையில் விசாரிக்கப்பட்டே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மாவட்ட மாகாண மட்ட தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பொறியிலாளர்களினால் செவ்வை பார்க்கப்பட்டு குறித்த இடத்திலுள்ள சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (iii) மின்விளக்கொன்று ரூபா 15,400 படி 328 உம் மின்விளக்கொன்று ரூபா 15,850 படி 72 உம் பொருத்தப்பட்டிருந்தது. இருப்பினும், இதே தரத்திலான மின்விளக்குகள் காரைதீவு பிரதேச சபையினால் ரூபா 9,600 படி பொருத்தியிருந்தது. இதன்படி சபையினால் ரூபா 2,352,400 தொகை சிக்கனமற்ற கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கொள்வனவின் போது ஏனைய நிறுவனங்களோடு ஒப்பீடு செய்து சிக்கனத் தன்மையாக மேற்கொள்ள வேண்டும். | எமது தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் எமது மாவட்டத்திலுள்ள குறித்த பொருட்கள் உள்ள கடைகளில் விலைகளை விசாரித்த பின்னரே இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதற்குள் வயர், மற்றும் மின்குமிழினை பொருத்துவதற்கான செலவுகளும் உள்ளடங்கலாகவே இச் செலவுகள் காணப்படுகின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | தங்களால் சுட்டக்காட்டப்பட்டது போன்று உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களினை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக்கூட்டங்களை உரிய முறையில் நடாத்தி அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 4.3 தீர்க்கப்படாத அவதானிப்பு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை சபையின் JCB வாகனத்தை வெளிக்கள வேலைக்காக தனிநபர்களுக்கு | வாடகை நிலுவையினை அறவீடு செய்வதற்கு | JCB வாகனத்தை வெளிக்கள வாடகைக்கு வழங்குவதன் மூலம் பெறப்படவேண்டிய தொகையில் ரூபா 47,100.00 இதுவரை அறவீடு |

| | | |
|---|---|---|
| வாடகைக்கு வழங்குவதன் மூலம் பெறவேண்டிய ரூபா 530,820 வாடகைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர் நடவடிக்கைக் மேற்கொள்ளப்பட வேண்டும். | செய்யப்பட்டுள்ளது. மீதித் தொகைகளை அறவீடு செய்வதற்கு எம்மால் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |